அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 22/99 (XXXIII)

எனது இலக்கம் : EST-6/TPORT/05/1010-1
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2017.11.07

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரசாங்க உத்தியோகத்தர்கள்/ மாகாண அரசாங்க உத்தியோகத்தர்கள்/ நீதித்துறை உத்தியோகத்தர்களுக்கான போக்குவரத்து வசதிகள்**

"அரசாங்க உத்தியோகத்தர்கள்/ நீதித்துறை உத்தியோகத்தர்கள்/ அரசாங்கக் கூட்டுத் தாபன/ நியதிச் சட்டச் சபைகளின் உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகள்" என்ற தலைப்பினால் பிரசுரிக்கப்பட்ட 1999.10.08 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 22/99 இன் 1:3 உப பந்தி பின்வரும் வகையில் திருத்தியமைக்கப்படுகின்றது.

**1:3 பிரதி / உதவி மட்டங்களையுடைய பதவிகளை வகிக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.**

1:3:1 சேவையின் அத்தியாவசியம் காரணமாக வாகனங்களும், எரிபொருளுக்கான ஏற்பாடுகளும் கிடைக்கப்பெறுமிடத்து, நிறுவனத் தலைவரின் தற்றுணிபில் அலுவலகத்திற்கும் வதிவிடத்திற்கு அண்மித்த இடங்களுக்கும் இடையிலான பயணத்திற்கு பின்வரும் உத்தியோகத்தர்களுக்கு குழு பிரயாண வசதிகள் அளிக்க முடியும். இதன்போது, இரு இடங்களுக்கும் இடைப்பட்ட தூரம் 50 கிலோ மீற்றர்களுக்கு மேற்படக் கூடாது. அத்தகைய வாகனமொன்று இரவு நேரத்தில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய இடமானது அந்நிறுவனத் தலைவரால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

(I) அமைச்சரவை அமைச்சு ஒன்றில் / திணைக்களம் ஒன்றில் பிரதிப் பணிப்பாளர், பிரதி ஆணையாளர், பிரதிக் கட்டுப்பாட்டாளர், உதவிப் பணிப்பாளர், உதவி ஆணையாளர், உதவிக் கட்டுப்பாட்டாளர் போன்ற மற்றும் அதற்கு நிகரான மட்டத்தில் பதவிகளில் இருக்கும் வேறு நாடளாவிய சேவையில் தரம் I, II, III ஐச் சேர்ந்த பதவிகளிளோ, அல்லது அதற்கு நிகரான வேறு சேவைகளில் அதே மட்டத்தில் இருக்கும் உத்தியோகத்தர்கள்.

(II) மாகாண பிரதம செயலாளர்களின் அலுவலகங்களில், மாகாண அமைச்சுக்களில் மற்றும் அத்தகைய அமைச்சுக்களின் கீழ் உள்ளதிணைக்களங்களில் பிரதி உத்தியோகத்தர் / உதவி உத்தியோகத்தர்மட்டத்துடைய பதவிகளை வகிக்கும் நாடளாவிய சேவையின் I, II, III ஆம் தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் அல்லது அதற்கு நிகரான வேறு சேவைகளில் அதே மட்டத்தில் இருக்கும் உத்தியோகத்தர்கள்.

02. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் உடன்பாட்டுடன் பிரசுரிக்கப்படுகின்றது.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு